**தலைப்பு 249 – திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 திசெம்பர் 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவுத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| வருமானக் குறியீடு | ஆரம்ப மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளபடியான வருமானம் | மிகை / (பற்றாக்குறை) ஆரம்ப மதிப்பீட்டிற்கான ஒப்பீடு | மிகை / (பற்றாக்குறை) ஆரம்ப மதிப்பீட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | % |
| 20.02.01.99 | 2,350 | 956.29 | (1,393.71) | (59.31) |
| 20.02.02.01 | 7,000 | 6,700.06 | (299.94) | (4.28) |
| 20.02.02.99 | 3,000 | 7,119.16 | 4,119.16 | 137.31 |
| 20.03.01.00 | 170 | 116,69 | (53.31) | (31.36) |
| 20.03.02.99 | 10,000 | 6,688.93 | (3,311.07) | (33.11) |
| 20.03.03.02 | 1,700 | 1,778.99 | 78.99 | 4.65 |
| 20.03.05.00 | 880 | 1,700.35 | 820.35 | 93.22 |
| 20.03.99.00 | 47,500 | 10,483.99 | 37,016.01 | (77.93) |
| 20.00.99.05 | 4,000 | 3,141.34 | (858.66) | (21.47) |
| 20.06.04.00 | 28,000 | 18,271.35 | (9,728.65) | (34.75) |
| 30.01.01.00 | 13,000 | 7,909.40 | (5,090.60) | (39.16) |
| | 117,600 | 64,866.55 | (52,733.45) | (44.84) |

மேலே குறிப்பிட்ட அட்டவணையில் உள்ள தகவல்களின் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| மேற்படி தகவல்களின் பிரகாரம் 08 வருமானக் குறியீடுகளின் ஆரம்ப வருமான மதிப்பீட்டிற்கு ஒப்பாக 04 சதவீதம் முதல் 78 சதவீத பற்றாக்குறையொன்றும் 03 வருமானக் குறியீடுகளுக்குரிய 05 சதவம் முதல் 137 சதவீதம் வரையான சேமிப்புக்கள் காணப்பட்ட போதும் வருமான மதிப்பீட்டை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | சரியான கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுப்பதற்காக அரசின் செலவினம் எந்த மட்டத்தில் காணப்பட வேண்டுமென தீர்மானிப்பதற்கும் பாதீடு விலகல் எவ்வாளவு என்பதை தீர்மானிக்கவும் மேற்பார்வை செயற்பாடுகளுக்காகவும் கொள்க பகுப்பாய்விறகாகவும் வருமான எதிரவுகூறல் மற்றும் அறிக்கையிடல் முறைப்படுத்தப்பட வேண்டும். | சேகரிக்கப்பட்ட வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட நியதகள் தீர்மானிக்கப்படாமையால் உள்ளவாறான மற்றும் மதிப்பீட்டிற்கு இடையே வேறுபாடொன்று ஏற்படலாம் என |
| மேற்படி வருமானக் கணக்கு தொடர்பாக மேலும் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) 20.02.01.99 ஆம் இலக்க வருமானக் குறியீடு – ஏனைய கூலி | | |
| i. பூகோடை டெக்டைல்ஸ் லங்கா லிமிடட் மற்றும் ரமோனா தனியார் கம்பனி இலக்கம் 223 மற்றும் 227 பிரதான வீதி கொழும்பு 11 வளவினை வாடகை அடிப்படையில் வழங்குவது தொடர்பாக மேற்குறித்த நிறுவனம் மேற்கொண்டிருந்த உடன்படிக்கை கடிதங்கள் மூலம் மாத்திரம் நீடிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 2014 யூன் 01 ஆந் திகதி | முறையான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இது பொது முயற்சி திணைக்களத்தின் விடயப்பரப்பிற்கு உட்படுவதால் விசாரணை அத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| முதல் 2019 மே 31 வரையான காலப்பகுதியில் மாதாந்த வாடகை குறைவடைந்துள்ளமையால் 2011 மே 31 ஆந் திகதி முதல் இது வரை முறையான உடன்படிக்கைக்கு வராமை காரணமாக அரசிற்கு கிடைக்க வேண்டிய வருமானம் குறைவடைந்துள்ளதாக அவதானிக்கப்பட்டது. | | |
| ii. சைனா பே ஒயில் பாம் (Chaina Bay Oil Farm) 2003 பெப்ரவரி 07 ஆந் திகதி முதல் 35 ஆண்டுகள் அரச மற்றும் மேற்குறித்த கம்பனியுடன் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை அமெரிக்க ஐக்கிய குடியரசின் முன்னைய 05 ஆண்டுகளின் திரட்டிய பணவீக்க விகிதத்தை அடிப்படையாக கொண்டு (based on the cumulative rate of inflation of the United States for the proceeding (05) year) தானாக திருத்தம் செய்யப்பட வேண்டியிருந்ததாகவும் உற்பத்தி இயளலவின் பிரகாரம் வாடகை தீர்மானிக்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறே புரிந்துணர்வு உடன்படிக்கையின் 1.2 பிரிவின் பிரகாரம் களஞ்சிய வசதிகள் மற்றும் காணியின் உரித்திற்காக 06 மாதங்களுக்குள் குத்தகை உடன்படிக்கை மேற்கொள்ளப்பட | முறையான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இது பொது முயற்சி திணைக்களத்தின் விடயப்பரப்பிற்கு உட்படுவதால் விசாரணை அத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியதுடன் அக்குத்தகை உடன்படிக்கை செயற்படுத்தப்பட்டால் குறித்த குத்தகை கொடுப்பனவு இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் நாளது வரையாக்கப்பட வேண்டும். எனினும், இது வரை குறித்த குத்தகை உடன்படிக்கைக்கு வருவதற்கோ அல்லது குத்தகையை சீராக்கி புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட வகையில் சீராக்க முடியாதிருந்தது. அதன் பிரகார் மீளாய்வாண்டில் 100,000 அமெரிக்க டெலர் வருமானமொன்ற கிடைகக்கும் இந்த உடன்படிக்கை நாளவரையாகாமை அதில் உள்ளடகப்பட்ட நிபந்தனைகளின் பிரகாம் நடவடிக்கை எடுக்காமை மற்றும் சொத்துக்கள் உயர்மட்டத்தில் பயன்படுத்தப்படாமை காரணமாக அரசாங்கத்திற்கு உரித்தாக வேண்டிய வருமானம் இழக்கப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | 20.02.02.01 ஆம் இலக்க வருமானக் குறியீடு – வட்டி – கடன் வழங்குதல்<br>---------------------------------------------- | | |
| | i. நிலுவை வட்டி மீதியை அறவிடுவதற்காக முறையான நடவடிக்கையொன்று எடுக்காமை காரணமாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வட்டி மீதி ரூபா | நிலுவை கடன்களை அறவிடுவது / தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய நீண்டகாலம் நிலுவயாக இருந்த ரூபா 564,199,381 தொகை 2019 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய நிலுவை தொகையை |

| | | |
|---|---|---|
| 2,368,167,107 ஆக இருந்தது. | | எதிர்காலத்தில் பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |
| ii. 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 04(ஆ) பந்தியின் பிரகாரம் அறவீடு செய்ய வேண்டிய நிலுவைப பணம் மேலும் சேர்வதை தவிர்ப்பதற்காக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் கணக்கின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 2,368,169,107 ஆன நிலுவையில் 2016 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து வரும் மீதிகளும் உள்ளடங்கியிருந்தன. | - மேற்படி - | இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் என்பன தற்போது செயற்படாத மட்டத்தில் இருப்பதால் பணத்தை அறவிட முடியாதுள்ளது.<br>சனச சங்கம் மற்றும் சர்வோதய சிக்கன முயற்சிகள் அபிவிருத்தி (கரண்டீ) லிமிடட் - சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக சட்டமா அதிபர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br>இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் - இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் - நிறுவனததில் ரூபா 960 மில்லியன் அளவில் பொறுப்புக்கள் காணப்படுவதால் வட்டியை விட்டுவிடுவதற்காக அங்ககாரம் பெற்றுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br>தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபை மில்கோ நிறுவனத்தின் வட்டியை விட்டுவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் |
| (இ) 20.03.02.99 ஆம் இலக்க விற்பனை கட்டணங்கள் - விற்பனை மற்றும் கட்டணம் நிருவாகக் கட்டணக் கொடுப்பனவும் நானாவித | | |
| 2019 திசெம்பர் 31 இல் ரூபா 1,089,385 ஆன நிலுவை மீதியானது 2016 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்து வரும் மீதியாகவும் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.<br>மேலும் இந்த கடன் மீதி | சுற்று நிருபத்திற்கு அமைய செயற்பட வேண்டும் எனவும், அதற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமெனவும் | நிலுவை வருமானத்தை சேகரிப்பது தொடர்பான உரிய அமைச்சுக்கும் திணைக்களங்களும் செயற்பட வேண்டும். அது தொடர்பில் தேவையான ஆலோசனை 05/2018 இலக்க திறைசேரி சுற்றுநிருபத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக மேற்படி (ஆ)(ii) சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 20.05.99.00 வருமானக் குறியீடு வேலை பொறுப்பளித்தல் தேசிய லொத்தர் சபை மற்றும் ஏனைய கையளிப்பு | | |
| | i. மீளாய்வாண்டில் 8 வேறுபட்ட நிதியங்களுக்குரிய ரூபா 4,572,986,527 லொத்தர் நிதி குறித்த நிதியத்தினை உருவாக்கிய நோக்கததிற்கு பயன்படுத்தப்படவில்லை. | வருமானம் குறித்த நோக்கங்களுக்கு பயன்படுத்துவது மற்றும் லொத்தர் விலை கொடுத்து வாங்குபவர்களின் பங்களிப்பிற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளல். | விசேட நிதியங்களுக்காக பெற்றுக்கொள்ள வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதனால் சேர்க்கப்படும் முழு நிதியையும் நிதியத்தில் சேர்ப்பது அவசியமில்லை. |
| (ii) | ஏழு லொத்தர்களுக்குரிய ரூபா 8,245,138,360.87 எந்தவொரு நிறுவனத்துக்கோ / நிதியத்திற்கோ பயன் படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வருமானம் உரிய நிதியத்திற்கு சேர்க்கப்பட வேண்டும். லொத்தருடான பங்களிப்பாளர்களுக்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | லொத்தர் வருமான குறிப்பிட்ட ஒரு நிதியத்திற்கோ நிறுவனத்திற்கோ ஒதுக்கப்படாத போதும் திரட்டு நிதியத்திற்கு வரவு வைப்பதன் மூலம் அனைத்து நிறுவனங்களுக்கும் ஒதுக்கப்படும். |
| (உ) | **20.06.04.00 வருமான கட்டளை கடனை மீள அறவீடு செய்தல்**<br>------------------------------------------- | | |
| | 2019 திசெம்பர் 6 நிறுவனங்களிடமிருந்து அறவிடப் வேண்டிய ரூபா 10,047,406,028 தொகையான மீதி காணப்பட்டதுடன் இந்நிலுவை மீதி 2016 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த மீதியொன்றும் உள்ளடங்கும். இந்த நிலுவை மீதி தொடர்பில் சுற்றுநிருபத்துக்கு அமைய செயற்பட்டிருக்கவில்லை. | நிலுவைக்கடன் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | அமைச்சரவை அனுமதியுடன் வரையறுக்கப்பட்ட கடதாசி கம்பனிக்கு பெற்றுக் கொடுத்த ரூபா 50,000,000 இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக் கொடுத்த ரூபா 8,676,923 நிதியானது 2019 ஆம் ஆண்டின் போது பதிவழிக்கப்பட்டுள்ளதுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய நீண்டகாலமாக ரூபா 275,578,711 ஆனது 2019 ஆல் அறவீடு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய கடன் நிலுவை குறித்த நிறுவனங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | | செலுத்துவதற்கு தெரியப்படுத்தியிருந்தும் அந்த நிறுவனங்கள் நிலுவையை தீர்வு செய்வதற்கு தவறியுள்ளன. |
| (ஊ) | **30.01.01.00 வருமான குறியீடு / வெளிநாட்டு மானியம்** | | |
| (i) | மீளாய்வாண்டில் மானியமாக பெறப்பட்டிருந்த ரூபா 44,726,524 பொது வைப்புக் கணக்குகள் 14 தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதி குறித்த நோக்கங்களுக்காக வருடம் முடியும் வரை பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | முதலீட்டாளர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் பெறப்பட்ட வெளிநாட்டு நிதி முதல் குறித்த நோக்கத்துக்கு இணைத்துக் கொள்வதை உறுதிப்படுத்த வேண்டும். | குறித்த முதல் முறையானது திட்டத்தினடிப்படையில் பயன்படுத்த குறித்த நிறுவன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தர், வெளிநாட்டு வளங்கள் பணிப்பாளர் நாயகத்தின் மேற்பார்வைக்கு உட்பட்டதாகும். உரிய செயற்திட்டம் தற்போது நடைபெறவில்லை என்பதால் அது அரச வருமானத்துக்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. |
| (ii) | மானியமாக பெற்றிருந்த ரூபா 40,757,312 நிதியானது குறித்த வேலைத் திட்டத்தில் பயன்படுத்தப்படாமல் மீண்டும் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | வழங்னர்களில் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் குறித்த வேலைத் திட்டங்களுக்கு குறித்த நிதியை பயன்படுத்துவது உறுதி செய்யப்பட வேண்டும். | குறித்த செயற்திட்டம் தற்போது செயற்படுத்தப்படாமல் அரச கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. |
| (iii) | ஒவ்வொரு வேலைத் திட்டங்களுக்காக வெளிநாட்டு அரசுகள் பல்வேறு நிறுவனங்களுடன் வழங்கும் மானியங்களை குறித்த வேலைத் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதனால் 6 வேலை திட்டங்களுக்காக கிடைத்த ரூபா 19,213,698 தொகை மீளாய்வாண்டில் பயன்படுத்தப்படாமல் மானிய வழங்குனர் | கிடைக்கப் பெற்ற வெளிநாட்டு மானியங்களை உச்ச பயனைப் பெறக்கூடிய வகையில் பயன்படுத்த நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | குறித்த செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அமைச்சு / திணைக்களம் எஞ்சிய முதலீட்டு நிதியை மானிய வழங்குனரின் வேண்டுகோளுக்கு இணங்க திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | களுக்கு திருப்பி அனுப்பப்பட்டது. | | |
| (iv) | குறித்த வருடத்தில் PIV மூலம் பெறப்பட்ட ரூபா 10,625,104 நிதியானது ஆண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | குறித்த வெளிநாட்டு முதலீடானது குறித்த காலத்தில் உரிய திட்டங்களுக்கு பயன்படுத்துவதற்கு தீர்மானிக்க வேண்டும். | வெளிநாட்டு மானியம் உரிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என குறித்த அமைச்சுக்கள் / திணைக்களங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. |
| (v) | வைப்புக் கணக்கு இலக்கம் 6000-0-0-10-0-1116 இன் கீழ் Strengthing Enforcement of law access to Justice Social Intergration செயற்திட்டம் தொடர்பில் 31 டிசம்பர் 2019 இல் பெறப்பட்ட ரூபா 1,923,158 தொகையான நிதி பயன்படுத்தப்படாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | உரிய நிதி பயன்படுத்தப்படாமை தெளிவாகின்றது. பயன்பாட்டிற்குரிய மானியங்கள் பெற்றுக்கொண்ட நிறுவனங்களின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் வெளிநாட்டு வளங்கள் பணிப்பாளர் நாயகத்தின் கூட்டிணைப்பிற்கு உட்பட்டதாகும். |
| (vi) | வைப்புக் கணக்கு இலக்கம் 6000-0-0-10-71 இன் கீழ் உலக சுகாதார நிறுவனத்தின் உதவி திட்டத்தின் கீழ் பெறப்பட்டிருந்த முதலீட்டு நிதியானது 3 சந்தர்ப்பங்களில் ரூபா 2,899,935 ஆனது மானிய வழங்குனர்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டது. | - மேற்படி. | உரிய நிதி பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பர்ாட்டது. நிதிப் பயன்பாடானது குறித்த திட்டத்திற்குள் நிறுவன மானியங்களைப் பெற்ற நிறுவனங்களின் கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் வெளிநாட்டு வளங்கள் பணிப்பாளர் நாயகத்தின் கூட்டிணைப்பிற்கு உட்பட்டதாகும். |
| (உ) | **20.03.99.00 வருமானக் குறியீடு - விற்பனை மற்றும் கட்டணம் - ஏனைய பெறுவனவுகள்**<br>------------------------------------------- | | |
| | நிதிப் பிரமாணம் 128(02) இற்கு அமைவாக சேகரிப்பது தொடர்பில் நாம் பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாடுமைய அரச வருமானத்தின் ஒரு | வருமான கணக்கு தொடர்பில் சரியான தகவல்களை பேணப்பட வேண்டியதுடன் உரிய சரியான ஆலோசணைகளும் | இது தொடர்பான தேவையான ஆலோசணை 05/2018 ஆம் இலக்க திறைசேரி செயற்பாட்டுச் சுற்று நிருப மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| பகுதி வேறு திணைக்களம் அல்லது அலுவலகம் ஊடாக திரட்டப்படுமாயின் அந்த திணைக்களம் காரியாலயத்தில் அறிக்கை பெறப்பட்டு அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள காரணிகளை வருமான மதிப்பீடுகளில் உள்ளடக்கப் பட்டிருப்பதனை போதியளவு உறுதிப்படுத்தல் அரச வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2016 திசெம்பர் 31 01/2015(v) ஆம் இலக்க அரச நிதி ஒதுக்கீட்டு சுற்றறிக்கையின் படி குறித்த அமைச்சு அல்லது திணைக்களத்துக்கு விசேடமாக அனுமதிக்க முடியாது வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் ஊடாக சேகரிக்கப்பட்ட வருமானங்கள் தொடர்பில் அந்தந்த நிறுவனங்களின் தலைவர்களால் மேற்கெள்ளபபட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக் வருமான கணக்காய்வின் போது தேவையான ஆவணங்கள் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திடம் காணப்படவில்லை. | வழிகாட்டல்களும் வழங்க வேண்டியதுடன் ஒழங்குபடுத்தல் கடுமையாக கடைப்பிடிக்க வேண்டும். | |

(ஊ) வருமான மதிப்பீடு திருத்தங்கள் செய்யப்படாமை

-----------------------------------------

| | | |
|---|---|---|
| 11 வருமானக் குறியீடுகள் தொடர்பில் மீளாய்வாண்டில் ரூபா 117,600,000,000 வருமானத்தை திரட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருந்தும் வருட | பாராளுமன்ற நிதி நிருவாகம் உறுதிப்படுத்தக்கூடிய வகையில் கூடுதலான முயற்சி எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்ட மதிப்பீடு உட்பட 2019 ஆம் ஆண்டின் இறுதி வரை வரைவு ஒதுக்கீட்டுச் சட்டம் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் |

| | | | |
|---|---|---|---|
| | முடிவில் ரூபா 65,735,634,334 மாத்திரமே திரட்டப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 56 சதவீதம் மாத்திரம் ஆகும். 03 வருமானக் குறியீடு தொடர்பில் மதிப்பிடப்பபட்ட வருமானத்தை விஞ்சிய வருமானம் திரட்டப்பட்டிருந்ததுடன் அது மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 105 சதவீதத்திலிருந்து 238 சதவீதம் வரை விலகலைக் காட்டியது. திணைக்களத்தினால் மீளாய்வாண்டில் அவ் வருமான மதிப்பீட்டை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. | | பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படாமையால் 2019 வருடத்திற்குரிய திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வில்லை என அரச நிதி கொள்கைகள் பணிப்பாளர் நாயகத்தின் FP/RVN/01/100/05/01 ஆம் இலக்க 2020-02-01 கடிதம் மூலம் தெரியப்படுத்தியிருந்தார். |
| (ஐ) | 7 வருமானக் குறியீடுகளில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 12,428,186,376 வருமானம் நிலுவையாக இருந்தது. இந்த நிலுவை வருமானத்தில் ரூபா 1,761,038,608 தொகை ஒரு வருட காலமாகவும் ரூபா 3,139,403,882 இரண்டு வருடங்களாகவும் ரூபா 7,527,753,886 தொகை 3 மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் இருந்து வருகின்றது. | நிலுவை வருமானங்களாக சேகரிப்பதில் கூடுதல் பிரயத்தனம் மேற்கொள்ளப்படுவதுடன் தீர்வு செய்வது கவனம் செலுத்த வேண்டும். | ரூபா 12,478,196,376 ஆன மொத்த நிலுவை வருமானத்தில் பெரும்பகுதியான ரூபா 12,415,674,134 ஆனது உப கடனாக இலங்கை இறப்பர் உற்பத்தி ஏற்றுமதி கூட்டுத்தாபனம், சணச சங்கம், சர்வோதய பொருளாதார விவசாய அபிவிருத்தி (கரண்டி) லிமிட்டட், இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம், தேசிய கால்நடை அபிவிருத்தி சபை, மற்றும் மில்கோ கம்பனி ஆகிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிலுவை கடனும் வட்டியும் ஆகும். மேலுள்ள சகல நிறுவனங்களும் கடன் செயலற்ற நிலைமையில் கடன்களை செலுத்த முடியாமல் காணப்படுவதாகவும், உபகடன் மற்றும் வட்டி என்பவற்றை அறவீடு செய்வதற்கு முடியாத நிலையில் உள்ளதாகவும் |

| | | |
|---|---|---|
| | | எதிர்காலத்தில் அந்த கடன் நிலுவைகளை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாவும் தயவுடன் அறிய தருகின்றேன் |

## 2.2 கட்டுநிதி

-------------

நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் ரூபா 1,946,034,961,930 ஆன செலவு மீதி காணப்பட்டதுடன் திணைக்களத்தின் புத்தகங்களுக்கு அமைய மீதி ரூபா 824,923 காணப்பட்டது. 2019 திசெம்பர் 03 ஆந் திகதியில் 271/2019 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கை 7(iv) பந்தியின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கட்டுநிதி சீராக்க கணக்கில் பின்வரும் வேறுபாடுகளை வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வேறு செலவினத் தலைப்புக்கள் தொடர்பில் திணைக்களம் ரூபா 500,165,200 செலவு செய்திருந்த போதும். சீராக்கக் கணக்கின் மூலம் ரூபா 165,200 குறைத்து ரூபா 520,000,000 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | ஓய்வூதிய கொடுப்பனவு திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைய அந்நிறுவனத்தில் ஓய்வு பெற்று உத்தியோகத்தரின் கடன் நிலுவை ரூபா 165,200.00 குறுக்குப் பதிவு மூலம் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் அந்தத் கட்டுநிதி சீராக்க கணக்கிற்கு உட்படுத்தப்படாமலிருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உங்களுடைய அவதானிப்பு தொடர்பில் அரச கணக்கு திணைக்களத்துடன் கலந்தாலோசித்து முன்வைக்க குறித்துக் கொள்ளப்பட்டது. |
| (ஆ) | திணைக்களத்தினால் சமர்பிக்கப்பட்ட திரட்டிய விரிவான பரீட்சை மீதியின் பிரகாரம் முற்பணம் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு திறைசேரி இறுதி கணக்குகளில் குறிப்பிடப்பட்ட | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | எமது திணைக்களத்தில் முற்பண கணக்கிற்குரிய பணமான இடம்பெறாத குறுக்குப் பதிவுகள் பெறுவனவு மற்றம் கொடுப்பனவு உள்ளடக்கப்பட்டு உட்படுத்தி கட்டுநிதி சீராக்க கணக்கு |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமானங்களுடன் முறையே ரூபா 796,479 மற்றும் ரூபா 414,407 ஆல் வேறுபட்டிருந்தது. இந்த வேறுபாடு கட்டுநிதி சீராக்கக் கணக்கில் ரூபா 5,900,984 மற்றும் ரூபா 3,353,712 என காட்டப்பட்டிருந்தன. | | தயாரிக்கப்பட்டிருந்ததுடன் வேறு திணைக்களத்தினால் பிழையாக கருதி கணக்கு வைக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் கவனத்திற் கொண்டிருக்கவில்லை. |

## 2.3 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

<table>
<tr><th></th><th>கணக்காய்வு அவதானிப்புக்கள்</th><th>முகாமைத்துவத்தின் கருத்துரைகள்</th><th>பரிந்துரைகள்</th></tr>
<tr><td>(அ)</td><td>08 வகையான செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,193,539,031 ஆன மிகை நிதிஏற்பாடு செய்யப்பட்டதால் 2019 திசெம்பர் 31 இல் ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாட்டில் 26 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையான வீச்சில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் திணைக்களத்தின் பாதீடு செய்யப்பட்ட செலவினங்களுக்கும் உள்ளபடியான செலவினங்களுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்ட போதும் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை செயற்திறாக முகாமைத்துவக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது</td><td>வருடாந்த மதிப்பீட்டின் மூலம் மிகை ஒதுக்கீடுகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.</td><td>உங்களால் முன் வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்படும் செலவின வகைகளின் ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்ட பின் மீளாய்வாண்டின் இறுதியில் மேலும் ஒதுக்கீடுகளை சேமிப்பதற்கான காரணங்கள் வருமாறு..<br><br><table><tr><th>செலவு</th><th>வேறுபாட்டிற்கான விடயங்கள்</th></tr><tr><td>249-1-1-0-11-2-11</td><td>வெளிநாட்டு பயண வாய்ப்புக்கள் கிடைக்காமை மற்றும் சனாதிபதி செயலாளரின் 2019-11-10 ஆல் அறிவுறுத்தல் கடிதத்திற்கு அமைய இந்த செலவு முகாமைத்துவத்தின் கீழ் செலவுகளை கட்டுப்படுத்தப் பட்டது</td></tr></table></td></tr>
</table>

| | |
|---|---|
| 249-1-1-0-1503-11 | தேசிய லொத்தர் சபை மூலம் திறைசேரிக்கு கொடுக்கப்படும் தொகை உரிய நிறுவனங்களால் செய்யப்படும் வேண்டுகோளை அடிப்படையாக கொண்டு திறைசேரியின் நிதி நிலைமையை கருத்திற் கொண்டு விடுவித்தல் |
| 249-1-1-0-2001/11 | மூலதன ஒதுக்கீடுகளில் 15 ஐ சேமிக்கும் படியும் மேலும் 10 மீதிப்படுத்துமாறு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய கட்டிட திட்டமிட்டபடி கட்டிட மேம்பாடுகள் செலவினம் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்படாமை |
| 249-1-1-0-2003/11 | திட்டமிட்ட படி வாகனப் பராமரிப்பு நடை பெறவில்லை. அத்துடன் 10 வருடங்களுக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | கும் மேற்பட்ட பழைய கார் ஒன்று கைதவிர்க்கப்ட்டமை |
| | | | 249-1-1-0-2012∴11 | கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்ட அலுவலக எழுதுகருவிகள் கொள்வனவு செய்யப்படவில்லை. |
| | | | 249-1-1-0-2401/11 | 2019 வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபத்தின் படி செலவு கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை. |
| | | | 249-1-1-1-1505/11 | எதிர்பார்த்த படி பங்களிப்பு தொகை கொடுக்கப்படாமை |
| | | | 249-1-2-0-2003∴11 | எதிர்பார்த்த படி வருடத்தில் கொடுப்பனவுகள் செய்யாமை |
| (ஆ) | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதி 255/2017 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் முறையாக பெறப்பட்ட பொருட்கள், சேவைகள் பூரணப்படுத்தப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்ட ஒப்பந்தம் தொடர்பில் மேலும் கொடுக்க வேண்டிய பெறுமானம் பொறுப்பாக வரையறை | சுற்றறிக்கையின் செயற்பட வேண்டும். | திணைக்களத்திலிருந்து அவசியமான அலுவலக வேலை தொடர்பாக கடமை நேரங்களில் வெளியே செல்லல், 2019 திசெம்பர் மாதம் உத்தியோகத்தர்கள் கடமைகள் தொடர்பில் ஈடுபடுத்தியமை, அவர்களுடைய கொடுப்பனவுகள், திணைக்களத்திற்கு அவசியமான | |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டுள்ளது. சுற்றறிக்கையின் 2(ஆ) பந்தியின் படி சகல பொறுப்புக்களும் அந்த வருடத்தினுள் பணம் கொடுத்து முடிக்கப்பட வேண்டியதுடன் எந்தவொரு பொறுப்பும் அடுத்த வருடம் தீர்க்கும் நோக்கில் கொண்டு செல்லப்பட கூடாது எவ்வாறாயினும், நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் (iii) இல் ரூபா 1,318,115 தொகை பொறுப்பாக காட்டப்பட்டிருந்தது. | | தொடர்பாடல்கள் குடிநீரை பெற்றுக் கொள்வதற்குரிய 2019 திசெம்பர் மாதத்தில் கொடுக்கப்பட்ட பட்டியல்களுக்காக மேற்கொண்ட கொடுப்பனவுகள் பொறுப்புக்களாக காட்டப்பட்டிருந்ததுடன், அச்சந்தர்ப்பத்தில் போதியளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. |

## 2.4 நிதிச் சொத்துகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) அரச கணக்குகள் சுற்றுநிருபத்தின் படி நிதி நிலைமை தொடர்பான கூற்றில் குறிப்பிட்ட தொகை திறைசேரியின் இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்படும் தொகைக்கு சமப்பட வேண்டும். அதன் படி கட்டுநிதி கணக்கின் மீதி ரூபா 824,983 இருக்க வேண்டிய போதிலும் ரூபா 170,087 குறைத்து ரூபா 654,896 ஆக காட்டப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைக்க இணங்க செயற்பட வேண்டும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் காசேடு தீர்வுசெய்யப்பட:ட இறுதி மீதியான ரூபா 170,087.00 திறைசேரிக்கு தீர்வு செய்யப்பட்ட போதும், 2019/12/31 இல் திறைசேரி கணனி கூற்றுக்களில் குறிப்பிடப்படாமை காரணமாக இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளதுடன் திணைக்களத்துடன் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்களின் பிரகாரம் நிதி நிலைமை தொடர்பான கூற்று தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) 2019 திசெம்பர் 31 இல் தீர்க்கப்படாத கட்டுநிதிக் கணக்கின் மீதியில் ரூபா 654,896 ஆன முற்பணக் | கணக்குகளில் சரியான தகவல்கள் உட்படுத்தப்பட வேண்டும். | தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு கொடுக்க வேண்டிய |

| | | |
|---|---|---|
| கொடுப்பனவுகள் பெற வேண்டிய முற்பணமாகிய நடைமுறை சொத்துக்களில் காட்டப்பட்டிருந்தது. | | தொகை தேர்தல் அலுவலகத்தால் மீள் அளிக்கப்படாமையால் மேலும் பெற வேண்டிய ரூபா 654,896 தொகை நடைமுறைச் சொத்துக்களில் காசு மற்றும் காசுக்கு சமமானவையாக காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2019-12-31 தினத்தில் தீர்க்கப்படாமல் காணப்படும் அனைத்து கட்டுநிதி மீதிகளும் தற்போது தீர்வுசெய்யப்பட்டு கணக்கீடு செய்ய மீதிகள் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டங்களை அடையாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் பிரதான செயற்பாடு களுடன் திறைசேரியின் நிதிச் செயற்பாட்டு முகாமை செலவீட்டு நிதி தேவைப்பாடு மதிப்பீட்டு முக்கியத்துவம் அடிப்படையில் நிதி விடுவிக்கப்பட்டதும் உள்ளடங்கும். அதற்கமைய கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு அமைய மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 2,416.74 பில்லியன் நிதி ஏற்பாட்டிற்காக ரூபா 1,400.34 பில்லியனும், ரூபா | காசுப் பாய்ச்சல் முகாமை மற்றும் செலவீடுகள் நிறுவனங்கள் நிதித் தேவைகளை மதிப்பீடு செய்து கட்டுநிதி விடுவிப்பதை கூடிய வகையில் வழங்க வேண்டும். | i. அமைச்சு திணைக்களங்களுக்கு திறைசேரி மூலம் மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களுக்காக முற்பணம் செலுத்தும் போது பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.<br>ii வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்திற்குரிய ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு அளவீட்டின் அடிப்படையில் அந்த அமைச்சு திணைக்களத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட |

3,428.23 பில்லியன் நிதி மூலதன ஏற்பாட்டிற்காகவும் ரூபா 609.14 பில்லியன் என மொத்தம் 2,009.48 ஆன கட்டுநிதி வரையறை விதிக்கப்பட்டிருந்தது. எனினம் வெவ்வேறு நிறுவனங்களால் அந்த அளவை மிகைத்து மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 1,530.78 பில்லியனும், மூலதனச் செலவினத்திற்காக ரூபா 906.85 பில்லியனுமாக மொத்தம் ரூபா 2,437.63 பில்லியன் கட்டுநிதி கோரப்பட்டிருந்தது. ஆனாலும் திறைசேரியால் அவ்வாறு கோரப்பட்ட கட்டுநிதியை வழங்காது ஆகக்கூடிய கட்டுநிதி எல்லை அளவை விட குறைவான மீண்டெழும் செலவுக்காக ரூபா 1,338.31 பில்லியனும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 395.72 பில்லியனுமாக மொத்தம் ரூபா 1,734.03 பில்லியன் கட்டுநிதி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன்படி மீண்டெழும் செலவினங்களுக்காக நிறுவனங்களால் கோரப்பட்ட கட்டுநிதியில் ரூபா 192.47 பில்லியன் அல்லது 12.57 சதவீதமும், மூலதன செலவினங்களுக்காக தொடர்பில் நிறுவனங்களினால் வேண்டப்பட்ட தொகையில் ரூபா 213.42 பில்லியன் அல்லது 53.93 சதவீதம் என் மொத்தம் ரூபா 405.89 பில்லியன் கட்டுநிதி திறைசேரியால் வழங்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் அரச நிதிக் கூற்றுக்களில் வருடாந்த கட்டுநிதி எல்லைகள் அவதானிக்கப்படும்.

iii அந்தந்த அமைச்சுக்கள் / திணைக்களம் மூலம் உடனடியாக நாளாந்தம் / மாதாந்தம் வேண்டப்பட்ட கட்டுநிதி கோரல் மற்றம் அது தொடர்பில் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் கருத்திற் கொள்ளப்படும்.

iv அந்தந்த அமைச்சு / திணைக்களத்திற்குரிய வங்கிக் கணக்குகளில் காணப்படும் உடனடி வங்கி / காசு மீதி தொடர்பில் கருத்திற் கொள்ளப்படும்.

v திரட்டு நிதியின் கீழ் காணப்படும் பணம் தொடர்பில் கருத்தில் எடுக்கப்படும்.

உயர்மட்ட முகாமையின் ஆலோசனைப் படி தேசிய தேவைகளின் அடிப்படையில் வழங்கக் கூடிய முன்னுரிமை கருத்தில் கொள்ளப்படும்.

அரக கடன் சேவை தொடர்பில் முன்னுரிமையளித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

| | | | |
|---|---|---|---|
| | துணை பிரிவு III இல் கடப்பாடுகளும் செலவினங்கள் பட்டியலின் பிரகாரம் மீண்டெழும் செலவினத்திற்காக தொடர்பில் மொத்தம் ரூபா 73.06 பில்லியனும் ரூபா 91.51 பில்லியனும் மொத்தம் ரூபா 164.57 பில்லியன் பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | அரச கடன் மற்றும் கடன் சேவை கணக்கீட்டு திணைக்களத்தின் பிரதான செயற்பாடு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் அரசினால் கொடுக்க வேண்டிய அரச கடன் மீதி ரூபா 12,187,858 மில்லியன் ஆகும் தெரிவுவு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் தகவல்களின் படி அந்த கடன் மீதி ரூபா 701,152 குறைவாகி காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.<br><br>பொறுப்புக்கள் — 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொறுப்புக்கள் பெறுமதி* ரூபா மில்லியன் | அரச கடன் பெற்றுக் கொள்ளுதல் கடன் சேவை கணக்கீடு செய்வதற்கு முறைப்படுத்த வேண்டும். | • அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணப் பணி திட்டம் (கடன் இலக்கம் 2007044, 2012032 மற்றும் 2012033) இலங்கை துறைமுக அதிகாரசபை மூலம் நிதிக் குத்தகை அடிப்படையில் கையளிக்கப்பட்டிருந்த போதும் அச் சொத்துக்கள் மேலும் துறைமுக அதிகார சபைக்குரியதாக இருப்பதுடன் அதனை கட்டி எழுப்புதவதற்காக பெறப்படும் கடன் முதல் அந்த அதிகாரசபையின் பொறுப்பாகும்.<br>• திறைசேரி முறிகளில் 2016 இற்கு முன் வழங்கப்பட்ட முறிகளின் ஆகக் குறைந்த விலை கணக்கீடு செய்வதற்காக ரூபா 318 பில்லியன் ஆக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் நடைமுறையில் அவ்வாறான மிகப் அதிகமாக ஒதுக்கீடு செய்வதானது வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை மேலும் |

நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படாத கடன்

| | |
|---|---|
| - கணக்குகளில் உள்ளடக்கப்படாத அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்திற்காக வழங்கப்பட்ட கடன் | 172,717 |
| - திறைசேரி பிணை முறி மீதி குறைத்து கணக்கீடு செய்தல் | 318,246 |
| - கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன் | 210,189 |
| | -------------- |
| மொத்தம் | 701,152 |
| | ===== |

அதிகரிப்பதற்கு காரணமாகும். அதனால் 2016 இற்கு முன்புள்ள பிணை முறிகளுக்குரியதாக ஆகக் குறைந்த விலையானது முறிகளின் காலம் முதிர்வடையும் ஆண்டின் போது சீராக்குவதற்கும் அதுவரை வெளிப்படுத்த நிதிக் கூற்றுக்களில் குறிப்பாக அப்பிணை முறிகளின் மகப்புப் பெறுமதியை வெளிப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

- 2019 ஆண்டில் வருடாந்த ஒதுக்கீட்டு சட்டத்தில் போதியளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படாதிருந்தும் திறைசேரியின் நிருவாகத்திற்கு அப்பால் சில அமைச்சுக்களில் நடைபெறும் வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களில்

பிரதிபலன்கள் இருந்தும் அவை 2019 ஆம் ஆண்டில் கணக்குகள் மூடும் சந்தர்ப்பத்தில் முன்வைக்கப்படாமை வருடாந்த கடன் பெறும் எல்லையை அதிகரித்துக் கொள்வது தொடர்பில் முன்வைப்பதற்கு திட்டமிடப்பட்ட வரைவு தொடர்பாக பாராளுமன்றத்தில் அனுமதியை பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் கிடைக்காமை போன்ற காரணங்களினால் கணக்கு வைப்பு தொடர்பில் முன் வைக்கப்பட்ட சில பிரதிபலன்கள் கணக்கீடு செய்வதற்கு முடியவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (இ) | வெளிநாட்டு உதவி கணக்கு வைப்பு செயற்பாடு தொடர்பில் வசதிகள் செய்வது திணைக்களத்தின் பிரதான பொறுப்பாகவிருந்தாலும் தெரிவுப் பரிசோதனை மீது பெறப்பட்ட தகவல்களின் படி 2018 மற்றும் 2019 வருடங்களில் திறைசேரிக்கு தெரியப்படுத்தாமல் 24 நிறுவனங்களால் 77 திட்டங்களை தொடர்பாக ரூபா 2,026 மில்லியன் வெளிநாட்டு மானியங்கள் நேரடியாக குறித்த நிறுவனங்களுக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த மானியங்கள் தொடர்பான தகவல்கள் திறைசேரி அறிக்கைகளில் உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. அதேபோன்று வேறு அமைச்சுக்கள் / திணைக்களங்களுக்கு இவ்வாறான நிதிகள் பெறப்பட்டதா என்பதை உறுதிப்படுத்த திறைசேரியிடம் முறையான நடைமுறையொன்று திறைசேரியிடம் எதுவும் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. | வெளிநாட்டு உதவிகளை பெறுவது தொடர்பில் உரிய முறையில் கணக்குகள் வைப்பது தொடர்பில் முறைப்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தலை உறுதிப்படுத்தி சுற்றறிக்கைக்கு புறம்பாகி செயற்படுவது தொடர்பில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அரச கணக்கு சுற்றறிக்கை இலக்கம் 30/94 இன் திருத்தப்பட்ட 2.0 பந்தி படியும், நிதி பிரமாண கோவையின் XI ஆம் அத்தியாயத்தின் விதிமுறைகளை மீறி வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்துக்கு தெரியப்படுத்தாமல் நேரடியாக வெளிநாட்டு நிதியினை பெற்றுக் கொள்ளும் அரச நிறுவனங்கள் தொடர்பில் கீழ்வருமாறு நடவடிக்கை எடுக்குமாறு வரிசை அமைச்சின் பொறுப்பான செயலாளர்களுக்கு ஆலோசணை வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>(i) சுற்றறிக்கை ஏற்பாடுகளை கருத்திற் கொள்ளாமல் பெற்றுக் கொள்ளப்படும் நேரடி வெளிநாட்டு மானியங்கள் உடனடியாக முறைப்படி கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.<br><br>(ii)எதிர்காலத்தில் எவ்வித காரணங்கள் காரணமாகவும் வெிளநாட்டு வளத் திணைக்களம் மற்றம் தேசிய பாதீட்டுத் திணைக்களம் அறிவுறுத்தப்படாமல் / அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் வெளிநாட்டு மானியங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கக் கூடாதென |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை திறைசேரியினால் 2 வர்த்தக வங்கிகளுக்கும் ஒரு நிறுவனத்துக்கும் வழங்கப்பட்ட ரூபா 8,476 மில்லியன் பெறுமதியான 07 உதவி கடிதங்கள் மற்றும் 10 மில்லியன் அமெரிக்க டொலர் (1,816.34 மில்லியன் ரூபா) பெறுமதியான 4 உதவு கடிதங்களும் காலாவதியாகியிருந்தன. | வங்கி பிணை மற்றும் உதவு கடிதங்கள் வழங்கும் செயற்பாடுகள் முறையாகவும் புதுப்பிக்கக் கூடிய வகையில் இருத்தல் வேண்டும். | **லங்கா ச.தோ.ச நிறுவனம்** 19/1659/108/147 ஆம் இலக்க மற்றும் 2019.05.30 ஆந் திகதி அமைச்சரவை விஞ்ஞானபனத்திற்கு அமைவாக லங்கா ச.தோ.ச லிமிட்டட் இற்கு வசதிகள் செய்து கொடக்கும் மூன்று கடிதங்களின் கீழ் பெற்றுக் கொண்ட கடன் தொகை மற்றும் கொடுக்க வேண்டிய வட்டித் தொகையின் மொத்தம் ரூபா 9.8 மில்லியன் நீண்டகால கடனாக மாற்றப்பட்டு வருடாந்தம் 11 சதவீத வட்டியில் திறைசேரியனாது இலங்கை வங்கி, மக்கள் வங்கியில் கொடுப்பனவு செய்வதற்கும், தேவையான ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்வதற்கும் 2019.06.25 இல் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி திறைசேரி மூலம் கடன் தொகையை கொடுத்து தீர்ப்பதற்கு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதுடன், அந்த உதவி கடிதங்களை இரத்துச் செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டு தாபனம் கூட்டுறுவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்தினால் (ச.தோ.ச) நெல் சந்தைப்படுத்தும் சபையிடம் நெல் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட ரூபா 880 மில்லியன் வசதிகள் அளிக்கும் இரண்டு |

| | | | |
|---|---|---|---|
| | | | கடிதங்களின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட நெல் இருப்பிற்கு உரிய பணத் தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, அபிவிருத்தி நிதி திணைக்களம் மற்றம் உரிய அமைச்சு ச.தோ.ச நிறுவனத்துக்கு தெரியப்படுத்தியுள்ளது. மேலும் தற்போது ச.தோ.ச நிறுவனத்திடம் நெல் இருபப்பினை விற்பனை செய்வதூடாக லங்கா ச.தோ.ச நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய பணத்தொகை கிடைக்கப் பெற்றதும் அக் கடன் தொகை தீர்க்கப்படுவதாக ச.தோ.ச நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கொடுக்கப்படாத நிலுவை ரூபா 689.6 மில்லியன் வரை குறைத்து காணப்படுகின்றது.<br><br>**மிஹின் லங்கா கம்பனி** மிஹின் லங்கா கம்பனி சார்பில் இலங்கை வங்கி, மற்றும் மக்கள் வங்கிக்கு வழங்கப்பட்ட வசதிகள் வழங்கும் கடிதத்தின் செல்லுபடியாகும் காலத்தை நீடிக்குமாறு அரச வணிக திணைக்களத்திடம் தெரியப்படுத்தப் பட்டுள்ளதுடன் அது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற் கொள்ளப்படுகின்றன. |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணம் 373 இன் பிரகாரம் அமைச்சுக்கள் மற்றும் திணைக்கங்களின் கட்டுநிதிக் கணக்கு | கண்காணிப்பு செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும். | 2019.12.31 திகதியில் உள்ளவாறு இன்னும் தீர்க்கப்படாதுள்ள கட்டுநிதிக் கணக்குகள் சீராக்கம் செய்து தீர்க்குமாறு உரிய |

| | |
|---|---|
| மீதிகளை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் தீர்க்க வேண்டிய போதும் 03 அமைச்சுக்கள், திணைக்களங்களின் மொத்தம் ரூபா 324 மில்லியன் மீதிகள் அவ்வாறு தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை. | அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்த திணைக்களம் மூலம் மேற்கொள்ளப்படும் தீர்ப்பனவு செயற்பாடுகளை அவதானிப்பதனை மட்டுமே மேற்கொள்கின்றது. |